**சிறுநிலவுடமையாளர் பெருந்தோட்ட தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (கிராமிய நிதியிடல் மற்றும் கடன் கூறு) - 2017**

---

சிறுநிலவுடமையாளர் பெருந்தோட்ட தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் (கிராமிய நிதியிடல் மற்றும் கடன் கூறு) 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2007 மே 08 ஆம் திகதிய 712-எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் V ஆம் உறுப்புரையின் 5.02 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிகழ்ச்சித்திட்டத்தின் கிராமிய நிதியிடல் மற்றும் கடன் கூறின் தொழிற்பாடுகள் மீது இலங்கை மத்திய வங்கியினால் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் இவ் அறிக்கை வழங்கப்பட்டுள்ளது.

## 1.2 நிகழ்ச்சித்திட்டத்தின் அமுல்ப்படுத்தல், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

சிறுநிலவுடமையாளர் பெருந்தோட்ட தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், இலங்கை மத்திய வங்கி நிகழ்ச்சித்திட்டத்தின் கிராமிய நிதியிடல் மற்றும் கடன் கூறிற்கான அங்கீகரிக்கப்பட்ட நிறைவேற்றல் முகவராக உள்ளது. பயனாளிகளின் நிறுவனரீதியான இயலளவு மற்றும் பேரம்பேசுதல் திறன்களை வலுப்படுத்துதல், சிறுநிலவுடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் செய்கையாளர்களின் காணிக் குத்தகை நிலைமைகளை மேம்படுத்துதல், முன்னேற்றகரமான அறுவடைக்குப் பின்னரான கையாளுகை ஊடாக உற்பத்தியாளர்களின் இலாபத்தினை அதிகரித்தல், அவர்களின் உற்பத்திப் பொருட்களினை களஞ்சியப்படுத்துதல், செயன்முறைப்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்துதல், கிராமிய நிதி மற்றும் கடன் சேவைகளை அபிவிருத்தி செய்து விரிவுபடுத்துதல் மற்றும் பெண்கள் தங்களின் வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்துவதை உறுதிப்படுத்துதல் என்பன நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 2,574 மில்லியனுக்குச் சமமான எஸ்டிஆர் 15.25 மில்லியன் (ஐ.அ.டொலர் 23 மில்லியன்) தொகையானதுடன் அதில் ஏறத்தாழ ரூபா 295 மில்லியனுக்குச் சமமான எஸ்டிஆர் 1.75 மில்லியன் (ஐ.அ.டொலர் 2.7 மில்லியன்) நிகழ்ச்சித்திட்டத்தின் கிராமிய நிதியிடல் மற்றும் கடன் கூறிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. நிகழ்ச்சித்திட்டத்தின் கிராமிய நிதியிடல் மற்றும் கடன் கூறிற்கான ஒதுக்கீடு 2014 செப்தெம்பரில் ரூபா 494 மில்லியனுக்கு சமமான எஸ்டிஆர் 2.6 மில்லியன் (ஐ.அ.டொலர் 3.8 மில்லியன்) ஆக திருத்தம் செய்யப்பட்டிருந்தது. நிகழ்ச்சித்திட்டம் அதனது நடவடிக்கைகளை 2010 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2016 திசெம்பர் 31 இல் பூர்த்தி செய்திருந்தது. பட்டியலிட்டிருந்தது. எனினும் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிக்கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி

நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், நிகழ்ச்சித்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான புத்தகங்கள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் நிகழ்ச்சித்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான நிகழ்ச்சித்திட்ட செலவினம் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள் நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கலிற்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

### 2.1 அபிப்பிராயம்

---------------------

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) நிகழ்ச்சித்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்.

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

--------------------------------------------------------------------

#### 2.2.1 பெறவேண்டிய கணக்குகள்

-------------------------------------------

நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 3.30 மில்லியன் மீதி 2012 ஆம் ஆண்டிலிருந்து இலங்கை மத்திய வங்கியால் அமுல்படுத்தப்பட்ட சௌபாக்கிய கடன் திட்டத்திலிருந்து பெறவேண்டியதாக தொடர்ச்சியாக காட்டப்பட்டிருந்தது. எனினும், அம்மீதி செலுத்த வேண்டிய மீதியொன்றாக அக்கடன் திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

-------------------------------------------------------------------

### 3.1 நிதிகளின் பயன்பாடு

-----------------------------------

பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் நிகழ்ச்சித்திட்டத்தின் கிராமிய நிதியிடல் மற்றும் கடன் கூறின் நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 494 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 2.60 மில்லியன் ஒதுக்கீட்டில் ரூபா 488 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 2.48 மில்லியன் தொகை செயற்திட்டக் காலப்பகுதியின் இறுதியில் பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 3.2 பௌதீக முன்னேற்றம்

--------------------------------------

மொனராகலை, கேகாலை, கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலுள்ள பயனாளிகளிற்கு 07 பங்குபற்றும் நிதி நிறுவனங்களூடாக முன்னைய ஆண்டின் இறுதியில் ரூபா 487.66 மில்லியன் பெறுமதியான 4,060 மீள்நிதிக் கடன்களை நிகழ்ச்சித்திட்டம் வழங்கியிருந்ததுடன் 2017 ஆம் ஆண்டில் மீள்நிதி கடன்கள் எதுவும் வழங்கப்பட்டிருக்கவில்லை. மேலும், ரூபா 421 மில்லியன் கூட்டுத்தொகையான மீள்நிதிக் கடன்களின் மூலதன அறவீடுகள் இலங்கை மத்திய வங்கியின் உள்நாட்டு செயற்பாடுகள் பிரிவில் பேணப்பட்ட விசேட கணக்கொன்றில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்டதுடன் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையானது ஏனைய 03 கொடை நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள் மூலம் வழங்கப்பட்ட மீள்நிதிக் கடன்கள் மீது மேற்கொள்ளப்பட்ட அறவீடுகளை ஒன்றுசேர்ப்பதன் மூலம் இலங்கை மத்திய வங்கியால் ஸ்தாபிக்கப்பட்ட தனிப்பயன்பாட்டு சுழற்சிக் கணக்கொன்றிற்கு அம்மீதியை மாற்றுவதற்கு 2017 யூலை 06 இல் தீர்மானிக்கப்பட்டிருந்தது.